கோவை மாவட்டத் தலைமை மருத்துவ மனை.

* 67 வினு.— திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு—செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாவட்டத் தலைமை மருத்துவ மனையை கோவையி லிருந்து மாற்றும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ), (இ) கோவை மாவட்ட தலைமை மருத்துவமனையை ஈரோடு நகருக்கு மாற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படும்..

திரு. வா. கை. அப்துல் ஜப்பார் : கோவையிலிருந்து மாற்றி மருந்த கத்தை திருப்பூரில் ஏற்படுத்தவேண்டுமென்று நீண்டநாட்களாகவே கோரிக்கை இருந்துவருகிறது. திருப்பூரில் ஒன்றரை லட்சத்திற்கு மேலாக மக்கள் வசிக்கிறுர்கள். பெரும்பாலும், அவர்கள் தொழிலாளர் களாக இருக்கிறுர்கள். ஆகவே, அங்கு ஒரு பெரிய மருந்தகத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது யார் கேட்கிறுர்கள் என் பதைப் பொறுத்து ஏற்படுத்துகிற மருத்துவமனையாகாது. மாவட்ட மருத்துவமனை என்ருல் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவாட்டர்ஸ் ஹாஸ்பிடல் என்ற முறையில் பார்க்க வேண்டும் கோவையில் இருந்த மாவட்ட மருத்துவ மனைமருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக உயர்வு பெற்றிருக்கிறது. பல்வேறு சிறப்புப் பகுதிகளோடு கூடிய ஒரு பெரிய மருத்துவமனையாக அது அமைந்து விட்டதால் அடுத்து அத்தகைய மாவட்ட மருத்துவ மனை இருக்கக்கூடிய ஒரு கேந்திரப் பகுதியாக இருக்கிற ஈரோடு தலைமை மருத்துவமனையைப் பெற தகுதி உடையதாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. திருப்பூர் அல்லது பொள்ளாச்சி அல்லது தாராபுரம் போன்ற இடங்களில் வேறு சிறந்த மருத்துவமனை வேண்டுமென்ருல் அந்தப் பகுதிகளிலிருந்து எந்த அளவிற்கு நன்கொடை வசூல் செய்து தருகிறுர்களோ அந்த அளவிற்கு விரிவுபடுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மா. சுப்பிரமணியன் : கோவையில் இருக்கிற மாவட்ட மருத்துவ மனையை ஈரோட்டிற்கு மாற்றியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறுர்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மாவட்ட மருத்துவ மனைகளில் கண், காது, மூக்கு, தொண்டை என்று இப்படி ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பிரிவு, தனித்தனித் துறை இருப்பதுபோல் இங்கும் தனித்தனித் துறைகள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறதா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : குழந்தை பிறந்தவுடன் எம்.எ., வகுப்பிலா அல்லது கல்லூரியில் எந்த வகுப்பில் சேர்ப்பது என்ற பிரச்சினை எழாது. இங்கு அமைக்கப்பட்டதற்குப் பின்னுல் படிப்படியாக வளர்ச்சி பெற வாய்ப்பு உண்டு வசதிக்கு வசதிக்கு ஏற்ப அவை செய்யப்படும்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : பொள்ளாச்சி மருத்துவ மனைக் கட்டடம் வசதி இல்லாது இருப்பதால் புதுக் கட்டடம் கட்டுவதற்கு நன் கொடை திரட்டித் தரவேண்டுமென்று அரசு பணித்திருந்தது. அந்த நன்கொடையை , ஐந்து இலட்சம் ரூபாயை இப்போது நாங்கள் கட்டி விட்டோம். அப்படி நன்கொடை திரட்டிக் கட்டிவிட்டதால் அங்கு புதிய கட்டடம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் துரித மாக மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொள்ளாச்சி நகர மக்களுடைய, அந்தப் பகுதி மக்களின் நல்வாழ்விற்காக ஐந்து இலட்சம் ரூபாய் பொது மக்களிடமிருந்து நன்கொடை திரட்டித் தந்து விரிவான மருத்துவ மனையை அமைக்கவேண்டுமென்ற முயற்சியை ஊக்குவித்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் அவர்களோடு ஒத்துழைத்தவர்களுக்கும் அமைச்சர் என்ற முறையில் நான் நன்றி செலுத்தவேண்டும். அந்தத் தொகையையும் வைத்து எந்த அளவிற்கு அங்கு விரிவாக கட்டடங்கள் கட்டி மருத்துவ வசதியை விரிவுபடுத்தமுடியுமோ அது செய்யப்படும்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவரவர்களே, தாராபுரம் மிகவும் பஞ்சப்பிரதேசம். எனவே, நாங்கள் நன்கொடை வசூல் செய்யமுடியாமல் இருக்கிறோம். எங்களுடைய ஊரில் இருக்கும் மருத்துவமனை பிற்பட்ட நிலையில் இருக்கிறது. பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்து கொடுக்க முடியவில்லையென்றாலும் கூட எங்கள் மருத்துவ மனையை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது பரிசீலிக்கப்படும்.

Improved varieties of livestock.

*68 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether there is any scheme with the Government to change the entire old stock of animals and poultry which the farmers are having with new improved stocks ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.